



Google வழி விளம்பரங்கள் Ielts tamil Ielts training Ielts details

# IELTS: அனைத்துலக ஆங்கில மொழிக்கான திறனாய்வுத் தேர்வு




IELTS உலகில் முதன்மையான ஆங்கில மொழிக்கான திறனாய்வு தேர்வாகும். இத்தேர்வில் கிடைக்கப்பெறும் ஒருங்கு கூட்டு மதிப்பெண்களின் அடிப்படையில், ஆங்கில மொழி பேசும் நாடுகளில் உயர் கல்வி, குடிபுகல் போன்ற காரணங்களுக்காக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. 2009 ஆம் ஆண்டு சராசரி கணிப்பின் படி 1.4 மில்லியனுக்கும் அதிகமானோர் 135 க்கும் அதிகமான நாடுகளில் இருந்து இத்தேர்வுக்கு தோற்றியுள்ளனர். இவ்வெண்ணிக்கை துரிதகதி வேகத்தில் அதிகரித்துச் செல்கிறது. உலகெங்கும் 6,000 க்கு மேற்பட்ட பல்கலைக் கழகங்கள், அரச நிறுவனங்கள், கல்விசார் அமைப்புகள் அயெல்ஸ் ஒருங்கு கூட்டு மதிப்பெண்களின் அடிப்படையில் நுழைவு அனுமதி வழங்குகின்றன. இதனால் உலகெங்கும் ஆங்கில மொழி திறனாய்வு தேர்வு முறைக்கு கற்போரின் எண்ணிக்கையும், பயிற்சி மையங்களும் பெருகி வருகின்றன. அயெல்ஸை உலகில் பிரசித்திப் பெற்றதும் நம்பகமுமான: கேம்பிரிஜ் பல்கலைக்கழகம் (University of Cambridge ESOL Examination), பிரிட்டிஸ் கவுன்சில் (British Council), ஐடிபி அவுஸ்திரேலியா (IELTS: IDP Australia) ஆகிய மூன்றும் இணைந்து நிர்வகித்து வருகின்றன. இவை இன்று உலெகெங்கும் 500 க்கும் அதிகமான தேர்வு மையங்களை கொண்டு, ஒவ்வொரு மாதமும் நான்குக்கும் மேற்பட்ட தேர்வுகளை நடாத்தி வருகின்றன. தேர்வுக்கு தோற்றுபவர்கள் தாம் வாழும் நாட்டில், தமக்கு அன்மித்த நகரத்தில் தோற்ற முடியும்.

IELTS என்பதன் முழுச்சொற்றொடர் International English Language Testing System என்பதாகும். தமிழில் “அனைத்துலக ஆங்கில மொழிக்கான திறனாய்வுத் தேர்வு" அல்லது "அனைத்துலக ஆங்கில மொழிக்கான தேர்வு முறை” எனப்படும். இதனை ஐஈஎல்டிஎஸ் என்று எழுதினாலும், உச்சரிக்கும் போது “அயெல்ஸ்” என்றே உச்சரிக்கவேண்டும். ஏனெனில் “அயெல்ஸ்” என்பது ஒரு சுருக்கப்பெயர் (Acronym) ஆகும்.




**Subscribe to Aangilam Email**

பாடங்களை மின்னஞ்சல் ஊடாகப் பெறுங்கள்.

Your email address:

Get email updates

Powered by FeedBlitz

11402 email readers BY FEEDBLITZ

6269 readers BY FEEDBURNER

ஆங்கில இலக்கணப் பாடங்கள்

- ஆங்கில பாடப் பயிற்சி 01
- ஆங்கில பாடப் பயிற்சி 02
- ஆங்கில பாடப் பயிற்சி 03
- ஆங்கில பாடப் பயிற்சி 04
- ஆங்கில பாடப் பயிற்சி 05
- ஆங்கில பாடப் பயிற்சி 06
- ஆங்கில பாடப் பயிற்சி 07
- ஆங்கில பாடப் பயிற்சி 08
- ஆங்கில பாடப் பயிற்சி 09

PDFmyURL

இந்த அனைத்துலக ஆங்கில மொழிக்கான திறனாய்வுத் தேர்வுமுறையில் இரண்டு வடிவங்கள் உள்ளன.

**கல்விசார் வடிவம் (Academic Training)**
**பொது பயிற்சி வடிவம் (General Training)**

இவற்றில் உங்களுக்கு பொருத்தமான தேர்வு வடிவத்தை நீங்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

**கல்விசார் வடிவம் – (Academic Test)**

கல்விசார் வடிவம் ஆங்கில மொழியின் ஊடாக இளங்கலை, முதுநிலை பட்டப்படிப்புக்கான பல்கலைக் கழகங்களின் நுழைவு அனுமதி, உயர்கல்விக்கான பயிற்சி நெறிகள், கல்வி நிறுவனங்களின் நுழைவு அனுமதி, மருத்துவத்துறைப் போன்ற உயர்பணிகள் போன்றவற்றிற்கானது. அதற்கு பரிட்சையாளர்கள் குறிப்பிட்ட பல்கலைக்கழகம், அல்லது குறிப்பிட்ட நிறுவனம் கோரும் ஒருங்கு கூட்டு மதிபெண் பெற்றிருக்க வேண்டும்.

தற்போது அமெரிக்காவில் சில பல்கலைக்கழங்களும் அயெல்ஸ் தேர்வு ஒருங்கு கூட்டு மதிப்பெண் அடிப்படையில் ஏற்றுக்கொள்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

**பொது பயிற்சி வடிவம் (General Training Test)**

பொது பயிற்சி வடிவம் ஆங்கிலம் பேசும் நாடுகளில் பொதுவான பணிப் பயிற்சிகள் பெறுவதற்கு, சாதாரணப் பணிகள் போன்றவற்றிற்கு, பாடசாலை அல்லது கல்லூரி போன்றவற்றில் கல்வியை தொடர்வதற்கு, மற்றும் ஐக்கிய இராச்சியம், அவுஸ்திரேலியா, கனடா, நியூசிலாந்து போன்ற நாடுகளுக்கான குடிபுகல் போன்ற காரணங்களுக்காக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இதுவும் பெறப்படும் ஒருங்கு கூட்டு மதிப்பெண் அடிப்படையிலேயே அனுமதி கிடைக்கும்.

இந்த அயெல்ஸ் தேர்வு நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

**கேட்டல் (Listening)**
**வாசித்தல் (Reading)**
**எழுதுதல் (Writing)**
**பேசுதல் (Speaking)**

தேர்வுக்கு தயாராகும் பரீட்சையாளர்கள் இந்த நான்கு பிரிவு குறித்தும் அறிந்து வைத்துக்கொள்ளல் அவசியம். அநேகமாக பரிட்சைக்கு தோற்றுவோரின் மனதில் எழும் எண்ணங்கள்: "ஒவ்வொரு பிரிவுக்கும் எவ்வெவ்வளவு நேரம் வழங்கப்படும்? ஒவ்வொரு பிரிவுகளினதும் உற்பிரிவுகள் எத்தனை? உற்பிரிவுகளுக்கு வழங்கப்படும் நேரம் எவ்வளவு? தேர்வுகள் எப்படி நடைப்பெறும்? அவற்றில் என்னென்ன உற்பட்டிருக்கும்?" போன்றவைகளாகவே இருக்கும். உண்மையில் இவற்றை அறிந்துவைத்துக் கொண்டால் பரீட்சைக்கு தோற்றுபவர்கள் தம்மை தயார்படுத்திக்கொள்ள எளிதாக இருக்கும். இதனை கருத்தில் கொண்டே இந்த ஆக்கம் வழங்கப்படுகிறது.

முழுமையான விபரம் கீழே வங்கப்பட்டுள்ளன.


- ஆங்கில பாடப் பயிற்சி 10
- ஆங்கில பாடப் பயிற்சி 11
- ஆங்கில பாடப் பயிற்சி 12
- ஆங்கில பாடப் பயிற்சி 13
- ஆங்கில பாடப் பயிற்சி 14
- ஆங்கில பாடப் பயிற்சி 15
- ஆங்கில பாடப் பயிற்சி 16
- ஆங்கில பாடப் பயிற்சி 17
- ஆங்கில பாடப் பயிற்சி 18
- ஆங்கில பாடப் பயிற்சி 19
- ஆங்கில பாடப் பயிற்சி 20
- ஆங்கில பாடப் பயிற்சி 21
- ஆங்கில பாடப் பயிற்சி 22
- ஆங்கில பாடப் பயிற்சி 23
- ஆங்கில பாடப் பயிற்சி 24
- ஆங்கில பாடப் பயிற்சி 25
- ஆங்கில பாடப் பயிற்சி 26
- ஆங்கில பாடப் பயிற்சி 27
- ஆங்கில பாடப் பயிற்சி 28
- ஆங்கில பாடப் பயிற்சி 29
- ஆங்கில பாடப் பயிற்சி 30
- ஆங்கில பாடப் பயிற்சி 31
- ஆங்கில பாடப் பயிற்சி 32
- ஆங்கில பாடப் பயிற்சி 33


ஆங்கிலம் பேசுவது எப்படி?


- ஆங்கிலம் பேசுவது எப்படி? 1
- ஆங்கிலம் பேசுவது எப்படி? 2


ஆங்கிலம் துணுக்குகள்


- ஆங்கிலம் துணுக்குகள் 01
- ஆங்கிலம் துணுக்குகள் 02
- ஆங்கிலம் துணுக்குகள் 03
- ஆங்கிலம் துணுக்குகள் 04
- ஆங்கிலம் துணுக்குகள் 05
- ஆங்கிலம் துணுக்குகள் 06
- ஆங்கிலம் துணுக்குகள் 07
- ஆங்கிலம் துணுக்குகள் 08
- ஆங்கிலம் துணுக்குகள் 09
- ஆங்கிலம் துணுக்குகள் 10
- ஆங்கிலம் துணுக்குகள் 11
- ஆங்கிலம் துணுக்குகள் 12
- ஆங்கிலம் துணுக்குகள் 13
- ஆங்கிலம் துணுக்குகள் 14
- ஆங்கிலம் துணுக்குகள் 15
- ஆங்கிலம் துணுக்குகள் 16




தேர்வுக்கு தோற்றும் பரீட்சையாளர்கள் அனைவருக்கும் "கேட்டல்" மற்றும் "பேசுதல்" ஆகிய இரண்டு பிரிவுகளும் பொதுவானதாகவே இருக்கும்.

ஆனால் "வாசித்தல்" மற்றும் "எழுத்துதல்" ஆகிய இரண்டு பிரிவுகளும் கல்விசார் வடிவத்திற்கும் பொது பயிற்சி வடிவத்திற்கும் இடையில் வேறுப்பட்டதாக இருக்கும். அதாவது வாசித்தல், எழுதுதல் ஆகிய இரண்டு பிரிவுகளும் கல்விசார் வடிவத்தில் கடுமையானதாகவே வடிவமைக்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்களை கீழே பார்க்கவும்.

**கேட்டல் (Listening)**

கேட்டல் பிரிவுக்கு வழங்கப்படும் நேரம் 30 நிமிடங்களாகும். இதில் நான்கு பகுதிகளும், அவற்றில் இருந்து 40 கேள்விகளும் உள்ளன. ஒலிப்பதிவு செய்யப்பட்ட உரையாடல்கள் ஒலிபரப்பப்படும். அவற்றை கவனமாகக் கேட்டு விடையை குறித்துக்கொள்ள வேண்டும். நான்கு கேட்டல் பகுதிகளினதும் முடிவில் "கேட்டல் தேர்வுக்கான விடை தாள்" (Listening Test Answer Sheet) இல் விடையை குறிக்க மேலதிகமாக 10 நிமிடங்கள் வழங்கப்படும்.

ஒலிப்பதிவு ஒருமுறை மட்டுமே ஒலிக்கப்படும் என்பதை நினைவில் இருத்திக் கொள்ளவும்.

**வாசித்தல் (Reading)**

வாசித்தல் பிரிவுக்கு வழங்கப்படும் நேரம் 60 நிமிடங்கள். இது மூன்று ஏட்டுரை வாசித்தல் பகுதிகளை கொண்டுள்ளது. ஒவ்வொரு பகுதியும் தோராயமாக 700 - 800 சொற்களைக் கொண்டவைகளாக இருக்கும். மூன்று வாசித்தல் பகுதிகளிலும் இருந்து 40 கேள்விகள் வரும். விடையை, "வாசித்தல் தேர்வுக்கான விடை தாள்" (Reading Test Answer Sheet) இல் குறிக்க வேண்டும். வாசித்தல் தேர்வு பிரிவில் விடையளிப்பதற்கு என்று மேலதிக நேரம் வழங்கப்படுவதில்லை என்பதை கவனத்தில் கொள்ளவும். கல்விசார் வடிவத்தில் ஏட்டுரை வாசித்தல் பகுதி கல்விசார் நூல்கள், சஞ்சிகைகள், செய்தித்தாள்கள் போன்றவற்றில் இருந்து பெறப்பட்டவைகளாக இருக்கும். வாசிப்பவர் தான் வாசித்ததை முழுமையாகப் புரிந்துக்கொண்டவராக இருந்தால் தான் கேள்விகளுக்கு சரியான பதிலளிக்க முடியும். பொது பயிற்சி வடிவம் பல்வேறு விளம்பரம், விபரக்கோவை, துண்டுப்பிரசுரங்கள் மற்றும் செய்தித்தாள் போன்றவற்றில் இருந்து வரும்.

**எழுதுதல் (Writing)**


- ஆங்கிலம் துணுக்குகள் 17
- ஆங்கிலம் துணுக்குகள் 18
- ஆங்கிலம் துணுக்குகள் 19
- ஆங்கிலம் துணுக்குகள் 20
- ஆங்கிலம் துணுக்குகள் 21
- ஆங்கிலம் துணுக்குகள் 22
- ஆங்கிலம் துணுக்குகள் 23

ஆங்கிலம் அட்டவணைகள்

- Glossary of Computer Terms
- அட்டவணை Common/Proper
- அட்டவணை Countable/Un
- அட்டவணை Infinitive + s/es
- அட்டவணை Irregular verbs
- அட்டவணை Prepositions
- இந்தியா Career Path Table
- உடல் உறுப்புகள் Body parts
- கணினி கலைச்சொற்கள்
- சமையல் (List of Provisions)
- பழங்கள் List of Fruits
- மரக்கறிகள் List of Vegetables

ஆங்கில ஆக்கங்கள்

- அமெரிக்க ஆங்கில வரலாறு
- அயெல்ஸ் அனைத்துலத் தேர்வு
- அறிமுகம் - நல்வரவு
- ஆங்கில உச்சரிப்புப் பயிற்சி
- ஆங்கில ஒலிக்குறிகள்
- ஆங்கில சொற்கள் எண்ணிக்கை
- ஆங்கில பிடிஎப் கோப்புகள்
- ஆங்கில மொழி வரலாறு
- ஆங்கிலம் மென்பொருள்
- ஆங்கிலம்: இணைப்பு நிரல்கள்
- ஆங்கிலம்: உதவிக்குறிப்புகள்
- இரண்டாம் ஆண்டு நிறைவு
- எமது பாடத்திட்டம்
- மீள்பதிவிடுவோர் கவனத்திற்கு
- முதலாம் ஆண்டு நிறைவு
- மொழிப்பெயர்ப்பு விளக்கம்

எழுதுதல் பிரிவுக்கு வழங்கப்படும் நேரம் 60 நிமிடங்கள். இதில் இரண்டு பகுதிகளை கொண்டுள்ளது. முதல் பகுதிக்கு 20 நிமிடங்களும், இரண்டாவது பகுதிக்கு 40 நிமிடங்களும் வழங்கப்படும். கல்விசார் வடிவத்தில் முதல் பிரிவாக 150 சொற்கள் கொண்ட ஒரு அறிக்கை எழுத வேண்டும். அறிக்கை தொடர்பான வரைப்படம், அட்டவணை போன்றவற்றின் ஊடாக விவரிக்கப்பட வேண்டும். பொது பயிற்சி வடிவத்தில் கடிதம் எழுதவேண்டும். இரண்டாவது பகுதி 250 சொற்கள் கொண்ட ஒரு கட்டுரை எழுத வேண்டும்.

**பேசுதல் (Speaking)**

பேசுதல் பிரிவு தோராயமாக 11 முதல் 14 நிமிடங்கள் வரை நடைப்பெறும். இது பரீட்சையாளருக்கும் அயெல்ஸ் தேர்வாளருக்கும் இடையிலான நேர்முகத் தேர்வாக நடைப்பெறும். இதுவும் மூன்று பகுதிகளைக் கொண்டது. முதல் பகுதி அறிமுகப் பகுதியாகும். பரீட்சையாளர் தன்னை அறிமுகப்படுத்திக்கொள்ள வேண்டும். தொடர்ந்து தேர்வாளர் தன்னை அறிமுகப் படுத்திக்கொள்வதுடன் 4-5 நிமிடங்கள் சில பொதுவான கேள்விகளை கேட்பார். இவை உங்கள் (கல்வி, தொழில், பொழுதுப்போக்கு போன்ற) தனிப்பட்ட விவரங்கள் தொடர்பானதாக இருக்கும். நீங்கள் சுருக்கப் பதில்களாக பதிலளிக்கலாம். அடுத்து ஏதாவது ஒரு பொது நிகழ்வு தொடர்பான ஒரு தலைப்பு அட்டை கொடுக்கப்படும். தயார்படுத்தலுக்கு 1 நிமிடம் அவகாசம் கொடுக்கப்படும். பின் அத்தலைப்பு தொடர்பில் 2 நிமிடங்கள் பேசவேண்டும். கடைசியாக 4-5 நிமிடங்கள் ஒரு கலந்துரையாடல் இடம் பெறும்.

பேசுதல் தேர்வின் போது ஒலிப்பதிவு செய்யப்படும். இந்த ஒலிப்பதிவு தேர்வாளரின் கண்காணிப்பிற்காகவும், சிலவேளை பரிட்சையாளர் தமக்கு கிடைக்கப்பெற்ற ஒருங்கு கூட்டு மதிப்பெண்ணை எதிர்த்து மனுதாக்கல் செய்கையில் அதனை மறுப்பரீசீலனைச் செய்யவும் எடுத்துக்கொள்ளப்படும்.

நான்கு பிரிவுகளும் மொத்தம் 2:44 நிமிடங்களில் முடிவடையும். முதல் மூன்று பிரிவுகளான கேட்டல், வாசித்தல், எழுதுதல் போன்ற மூன்று பிரிவுகளும் ஒன்றன்பின் ஒன்றாக தொடர்ந்து இடைவெளி இன்றி நடைப்பெறும். பேசுதல் பிரிவு மட்டும் இடைவெளி விட்டு நடத்தப்படும். அநேகமாக குறிபிட்ட அதே நாளிலேயும் நடைப்பெறலாம். அல்லது ஏழு நாட்களுக்கு முன்பாக அல்லது பின்பாகவும் நடைப்பெறலாம். தேர்வு முடிவடைந்து 13 நாட்களின் பின்னர் தேர்வின் பெறுபேறுகளை நீங்கள் பெறக்கூடியதாக இருக்கும்.

**ஒருங்கு கூட்டு மதிப்பீடு**

-------------------------------------------------------------------------------------

இந்தத் தேர்வில் வெற்றி (pass) தோழ்வி (fail) இல்லை. 1 முதல் 9 வரையான ஒருங்கு கூட்டு மதிப்பெண்களின் அடிப்படையில் ஒருவரின் ஆங்கில மொழிக்கான திறனை மதிப்பீடு செய்யப்படுகின்றது. ஆகக்கூடிய ஒருங்கு கூட்டு மதிப்பெண்ணாக 9 வழங்கப்படுகின்றது. 9 மதிப்பெண்களைப் பெற்றவர், முழுமையான ஆங்கில மொழி ஆளுமை மிக்கவர் (தேர்ந்த பயனர்/ வல்லுநர்) என்றும், 1 எடுத்தவர் ஒருசில சொற்களை தவிர ஆங்கில மொழியை பயன்படுத்தும் திறன் முற்றிலும் அற்றவர் என்றும் மதிப்பிடப்படுகின்றது. மேலும் அட்டவணையில் பார்க்கவும்.

**English Grammar Lessons**

- Abbreviations and Acronyms
- Articles
- can / be able to
- can and could
- Common Nouns / Proper Nouns
- Computer Acronyms
- could , was / were able to
- Date and Time
- Future "going to"
- Future Continuous Tense
- Grammar Patterns 01
- Grammar Patterns 02
- Grammar Patterns 03
- Grammar Patterns 04
- Grammar Patterns 05
- Grammar Patterns 06
- Grammar Patterns 07




ஒருங்கு கூட்டு மதிப்பெண்களின் அடிப்படையில் ஒருவரின் ஆங்கில மொழிக்கானத் திறனை எவ்வாறு மதிப்பீடு செய்யப்படுகின்றது என்பதனை கீழே பார்க்கவும்.

**9 = Expert User** (தேர்ந்த பயனர்/வல்லுநர்)
இவர் ஆங்கில மொழியில் முழுமையான ஆளுமைப் பெற்றவர். ஆங்கில மொழியில் எதனையும் எளிதாகவும் துல்லியமாகவும் விளங்கிக்கொள்ளும், பயன்படுத்தும் முழுமைத் திறன் பெற்றவராவார்.

**8 = Very Good User** (மிகச் சிறந்த பயனர்)
ஆங்கில மொழியில் ஆளுமை உள்ளவர். ஆனால் மிகத்துல்லியாமான ஆளுமை இல்லை. சிற்சிறு தவறுகள் ஏற்படுகின்றன. தமக்கு பரீட்சையம் இல்லாத விடயங்களில் தவறுதலாக புரிந்துக்கொள்வதற்கான வாய்ப்பு உண்டு. ஆனால் ஆங்கில மொழியில் சிக்கலான விவாதங்களை புரிந்து கையாளும் திறன் பெற்றவர்.

**7 = Good User** (சிறந்த பயனர்)
ஆங்கில மொழியில் ஆளுமை உண்டு. ஆனால் அவ்வப்போது துல்லியமல்லாத, பொருத்தமற்ற பயன்பாடுகள் மற்றும் சில சந்தர்ப்பங்களில் தவறாகப் புரிந்து கொள்ளுதல் போன்றவை ஏற்படுகின்றன. இருப்பினும் பொதுவாக சிக்கலான மொழிப் பயன்பாட்டை கையாளக்கூடியவர். விவாதங்களைப் புரிந்து கொள்ளக் கூடியவர்.

**6 = Competent User** (திறனான பயனர்)
ஆங்கில மொழியில் பொதுவான ஒரு ஆளுமை உண்டு. இருப்பினும் சில துல்லியமற்ற பயன்பாடுகள், பொருத்தமற்ற பயன்பாடுகள், தவறாக புரிந்துக்கொள்ளல் போன்றன உள்ளன. தமக்கு பரீட்சையமான சூழல்களில் சிக்கலான மொழிப்பயன்பாட்டை புரிந்துக்கொள்ளும், பயன்படுத்தும் திறன் உண்டு.

**5 = Modest User** (அளவான பயனர்)
ஆங்கில மொழி ஆளுமை ஓரளவு உண்டு. தவறுகள் பல ஏற்படுகின்றன. ஆனால் பல சந்தர்ப்பங்களில் பொருளை மேலோட்டமாக புரிந்துக்கொள்ளும் திறன் உண்டு. தமது துறையில் அடிப்படையான தொடர்புகளை கையாளக்கூடியவர்.

**4 = Limited User** (குறைந்த அளவான பயனர்)
பழக்கமான சூழல்களுக்கான அடிப்படை மொழி திறன் உண்டு. புரிந்துக்கொள்வதிலும், தமது கருத்தை


- Grammatical Person in English
- have / have got
- History of American English
- History of the English language
- How To Use Capital Letters
- IELTS Preparation
- Irregular verbs
- List of Prepositions
- May be able to
- Parts of Speech
- Passive Voice
- Past Continuous Tense
- Past Perfect Continuous
- Polite and More Polite
- Prepositions
- Prepositions of Place
- Prepositions of Time
- Present Continuous Tense
- Present Perfect
- Present Perfect Continuous
- Pronouns
- Should be able to
- Simple Future Tense
- Simple Past Tense
- Simple Present Tense
- there is
- Third Person Infinitive + s/es
- Types of Nouns
- Use a/an Vowels and Consonant
- was / were going to
- will be able to
- இறந்தக்கால தொடர்வினை
- எதிர்காலத் தொடர்வினை
- சாதாரண இறந்தக்காலம்
- சாதாரண எதிர்காலம் 01
- சாதாரண எதிர்காலம் 02
- சாதாரண நிகழ்காலம்
- நிகழ்காலத் தொடர்வினை

வெளிப்படுத்துவதிலும் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. சிக்கலான மொழியமைப்பை பயன்படுத்த முடியாதவர்.

**3 = Extremely Limited User** (மிகக் குறைந்த அளவிளான பயனர்)
மிகவும் பரீட்சையமான சூழல்களில் மட்டும் பொதுவான பொருளை புரிந்துக்கொள்ளக் கூடியவர். தொடர்பாடல்களின் போது அடிக்கடி இடைமுறிவு ஏற்படுகின்றது.

**2 = Intermittent User** (அவ்வப்போது பயன்படுத்தும் பயனர்)
மிகவும் அடிப்படையான ஒரு சில சொற்களை தமக்கு பழக்கப்பட்ட சூழல்களில் பயன்படுத்துவதைத் தவிர, ஆங்கில மொழியில் தொடர்பாடல்கள் எதனையும் மேற்கொள்ளல் இவருக்கு சாத்தியமில்லை. ஆங்கில மொழியில் பேசுதல், எழுதுதல், புரிந்துக்கொள்ளல் போன்றவற்றில் மிகவும் கடினப்படுபவர்.

**1 = Non-User** (பயன்படுத்தாதவர்)
அடிப்படையில் ஆங்கில மொழியை பயன்படுத்தும் திறன் அற்றவர். ஒருசில ஒற்றைச் சொற்கள் மட்டும் தெரியும்.

**0 = No Attempt** (பரீட்சையை மேற்கொள்ளவில்லை)
மதிப்பீடு செய்யும் அளவில் தகவல்கள் அளிக்கப்படவில்லை.

இந்த அயெல்ஸ் தேர்வுக்கு தோற்றவிரும்புபவர்கள், தாம் வாழும் நாட்டில், தமக்கு அன்மித்த நகரில் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம். ஒவ்வொரு மாதமும் நான்கு அல்லது ஐந்து தேர்வுகள் நடாத்தப்படுகின்றன. தேர்வுக்கான விண்ணப்பப் படிவத்தினை பரிட்சையாளர் தனக்கு அன்மித்த அயெல்ஸ் தேர்வு மையத்தில் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம். அல்லது நேரடியாக கீழே பதிவிறக்கிக்கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவம் பதிவிறக்கம் PDF
அதிகாரப்பூர்வத் தளம்: http://www.ielts.org/

அயெல்ஸ் தேர்வுக்கு தயார் செய்துக் கொண்டிருப்போருக்கு இத்தகவல்கள் நிச்சயம் உதவியாக இருக்கும். இன்னும் இப்படி ஒரு தேர்வு இருப்பதே தெரியாதவர்களும் நம்மில் இருப்பர். அவர்களுக்கும் இத்தகவலை கொண்டுச்செல்லுங்கள். எல்லோரும் பயனடையட்டும்.

இந்த அயெல்ஸ் தேர்வுக்கு தோற்றவிரும்புவோர் என்ன மாதிரியான பயிற்சிகளை மேற்கொள்ளலாம் எனும் அலோசனைக் குறிப்புகளை அடுத்தப்பதிவில் பார்ப்போம்.

இந்த அயெல்ஸ் தேர்வு தொடர்பான கேள்விகளை கேட்கவிரும்புவோர் இப்பதிவில் பின்னூட்டாமாகவோ அல்லது மின்னஞ்சல் ஊடாகவோ கேட்கலாம்.

நன்றி!

அன்புடன்
அருண் HK Arun

Download As PDF

+ 9

Posted by HK Arun at Saturday, October 09, 2010

Labels: IELTS, அயெல்ஸ், ஆங்கில ஆக்கங்கள், சிறப்பு பாடங்கள்

## 17 comments:

**உமாபதி said...**

DO YOU LIKE AANGILAM?




Find us on Facebook

Link to AANGILAM

மிக்க நன்றி சார்
அடுத்த பதிவிற்கு காத்திருக்கிறேன்

October 11, 2010 at 1:57 PM

**Anonymous said...**

I can able to speak in english - this sentence is correct or not.

October 12, 2010 at 12:03 AM

**HK Arun said...**

-உமாபதி

//அடுத்த பதிவிற்கு காத்திருக்கிறேன்//

நன்றி நண்பரே விரைவில் இடுகிறேன்.

October 12, 2010 at 2:00 AM

**HK Arun said...**

அனானி நண்பரே!

//I can able to speak in english - this sentence is correct or not.//

பிழை

http://aangilam.blogspot.com/2007/12/1.html

இந்தப் பாடத்தில் இலக்கம் 15, 16 பார்க்கவும்.

October 12, 2010 at 2:03 AM

**kaja said...**

பதில் அளித்தமைக்கு நன்றி, தவறை திருத்திக்கொண்டேன், உங்கள் சேவை தொடர எனது வாழ்த்துக்கள்

October 12, 2010 at 11:39 PM

**kaja said...**

உங்கள் இந்த முயற்சி மிகவும் பாராட்டுக்குரியது, உங்கள் தளத்தை பற்றிய முழு விவரத்தை ஒரு பதிவாக எனது பதிவில் இட்டுருக்கிறேன். ஒரு பாடத்திற்கும், அடுத்த பாடத்திற்கும் இடையில் நீண்ட நாள் காக்க வைக்கிறீர்கள், இருந்தாலும் உங்கள் சேவை புனிதமானது. எனது வாழ்த்துக்கள்.

October 29, 2010 at 10:48 PM

**HK Arun said...**

- kaja

பாராட்டுக்கும் வாழ்த்துக்களுக்கும் மிக்க நன்றி நண்பரே!

உங்கள் தளத்தில் அறிமுகப் பதிவிட்டுள்ளமைக்கும் நன்றிகள்.

//ஒரு பாடத்திற்கும், அடுத்த பாடத்திற்கும் இடையில் நீண்ட நாள் காக்க வைக்கிறீர்கள்//

ஏற்றுக்கொள்கிறேன். நேரப் பற்றாக்குறையே காரணம். எதிர்வரும் காலங்களில் அதிகமான பாடங்களை வழங்க முயற்சி செய்கின்றேன்.


இத்தளத்திற்கு இணைப்பு வழங்குவதன் மூலம், ஆங்கிலம் கற்க விரும்பும் ஆர்வலர்களுக்கு நீங்களும் உதவலாம். கீழே உள்ள நிரல் துண்டை வெட்டி உங்கள் வார்ப்புருவில் (Cut > Paste) ஒட்டிவிடுங்கள். நன்றி!

```
<a href="http://aangilam.blogspot.com/"/><img src="http://lh3.google.com
```

மேலும் இணைப்பு நிரல்கள்

**Since May 2010**

**15,853,084**

**AANGILAM Archive**

October (1)

Powered byIP2Location.com

நன்றி!

October 30, 2010 at 10:26 AM

**எம்.எம்.அப்துல்லா said...**

arun anna,

long time no see.what happened? r u well??

December 19, 2010 at 1:21 PM

**Arshad said...**

I am waiting from next lesson

September 7, 2011 at 11:49 PM

**saranya saravanan said...**

நான் அயெல்ஸ் தேர்வுக்கு தயார் செய்துக் கொண்டிருக்கிறேன் எழுதுதல் பகுதி கடினமாக உள்ளது.இலக்கண பிழை வருகிறது.தமிழ் வழியாக ஆங்கிலம் கற்றுத்தருவது போல அயெல்ஸ் தேர்வுக்கு கற்றுத்தந்தால் என்னை போல தமிழ் வழி கற்ற மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் .

February 6, 2013 at 3:06 AM

**saranya saravanan said...**

நான் அயெல்ஸ் தேர்வுக்கு தயார் செய்துக் கொண்டிருக்கிறேன் எழுதுதல் பகுதி கடினமாக உள்ளது.இலக்கண பிழை வருகிறது.தமிழ் வழியாக ஆங்கிலம் கற்றுத்தருவது போல அயெல்ஸ் தேர்வுக்கு கற்றுத்தந்தால் என்னை போல தமிழ் வழி கற்ற மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் .

February 6, 2013 at 3:08 AM

**kirushanth kani Kiri kani said...**

Realy good sir thank you

March 5, 2013 at 10:28 AM



**Kannanappasamy Kannan said...**

sir,i"ll start to future ILTES. So you kindly help to me because did i apply to the Australia so you send to me listening,speaking,writing,reading question and answer model send to me sir. this is my E mail id:kannanptm1985@yahoo.co.in thanks sir.

October 25, 2013 at 11:20 AM

**raja said...**

Dear sir, i am very happy to say this information very useful to me thanks.

December 15, 2013 at 4:20 PM

**poda dai said...**

which number is eligible ?

April 20, 2017 at 8:04 PM

**Mohammed Sabrin** said...

Thank you so much..

July 25, 2018 at 11:25 PM

**Unknown** said...

Thank you

November 17, 2018 at 4:23 PM

## Post a Comment

Enter your comment...

Comment as: Google Accoun

Publish Preview

இந்த ஆங்கிலம் (AANGILAM) வலைத்தளத்தின், ஆங்கில பாடப் பயிற்சிகள் பலருக்கும் பயன்படவேண்டும் எனும் நன்நோக்கிலேயே பதிவிடப்படுகின்றன. இத்தளத்திற்கு நீங்கள் இணைப்பு வழங்குதல் மிகவும் வரவேற்கத்தக்கது. அது, ஆங்கிலம் அத்தியாவசியமாகிவிட்ட இக்காலக்கட்டத்தில் மேலும் பலருக்கு ஆங்கிலம் கற்றிட நீங்களும் உதவியதாக இருக்கும். அதேவேளை இத்தளத்தின் பாடப் பயிற்சிகளை பத்திரிக்கைகள், சஞ்சிகைகள், இணையத்தளங்கள், வலைப்பதிவுகள், மன்றங்கள், கருத்துக்களங்கள் போன்றவற்றில் நீங்கள் அறிமுகப் படுத்த விரும்புவதாயின், பாடத்தின் ஒரு பகுதியை மட்டும் இட்டு, குறிப்பிட்ட பாடத்திற்கான (**URL**) இணைப்பு வழங்குதல் நியாயமான செயற்பாடாகக் கருதப்படும். இணைய வழி அல்லாத செய்தித்தாள்கள், சஞ்சிகைகள் என்றால் கட்டாயம் எமது வலைத்தளத்தின் பெயரை **www.aangilam.org** குறிப்பிடல் வேண்டும். அத்துடன் (**aangilam** AT **gmail.com)** எனும் எமது மின்னஞ்சல் முகவரி ஊடாகவோ அல்லது குறிப்பிட்ட பாடத்தில் பின்னூட்டம் ஊடாகவோ அறியத்தருதல் வரவேற்கப்படுகின்றது. **அவ்வாறின்றி, பாடங்களை முழுதுமாக வெட்டி ஒட்டி, உள்ளடக்கங்களை மாற்றி பதிவிடல்/மீள்பதிவிடல்; நூல், மின்னூல், செயலி வடிவில் வெளியிடல் போன்றவை உள்ளடக்கத் திருட்டாகும். எனவே அவ்வாறு செய்யாதீர்கள்.** மேற்கூறியவை மட்டுமன்றி, எமது எழுத்துமூல

அனுமதியின்றி, எவரும் எவ்விதமான வணிகப் பயன்படுத்துதலும் கூடாது. மேலும் இப்பாடங்கள் மேலும் மேம்படுத்தப்பட்ட நிலையில் **(விடுப்பட்ட பாடங்களுடன்)** நூல் வடிவில் விரைவில் வெளிவரும் என்பதனை அறியத் தருகின்றோம். அப்போது, அந்நூல் தொடர்பான அறிவித்தலை இத்தளத்தின் முகப்பில் காணலாம். நன்றி!

Copyright 2007-2018 © www.aangilam.org, All rights reserved.

PDFmyURL.com - convert URLs, web pages or even full websites to PDF online. Easy API for developers!